**நிகழும் சோபகிருது வருடம் மார்கழி மாதம் 13 ஆம் நாள் (29.12.2023) வெள்ளிக்கிழமை அன்று நாமக்கல் நகராட்சி நகர்மன்ற கூடத்தில் மாலை 5.00 மணிக்கு நடைபெற்ற அவசர கூட்டப் பொருள்**

**பொருள் எண்.1 :**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட நல்லிபாளையம் கிராமம் புல எண்கள்.69/10A,10B, 10C, 2pt, 3, 71/1, 2Cpt, 2H1, 2H2, 72/1, 79/3pt மற்றும் தும்மங்குறிச்சி கிராமம் புல எண்கள்.20/2, 21/4G, 22, 23/3A–இல் 32.05 ஏக்கர் பரப்பில் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற மனைப்பிரிவில் சிறுவர் பள்ளிக்காக ஒதுக்கப்பட்ட இடத்தினை (தற்போது சர்வே எண்.23/14) 0.66ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அனுமதி கோரி திரு.வி.சத்தியமூர்த்தி மற்றும் மூவர், வகுரம்பட்டி, நாமக்கல் ஆகியோர் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களுக்கு நேரடியாக விண்ணப்பித்ததின் அடிப்படையில், நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களின் ந.க.எண்.422/2023நாமா, நாள்.10.05.2023ஆம் தேதிய கடிதத்தில், மனைப்பிரிவின் வரைப்படத்திற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு சாலைகள் மற்றும் பொது உபயோக இடங்களை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டதைத் தொடர்ந்து இறுதி ஒப்புதல் வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மனைப்பிரிவிற்கான இடத்தில் சாலை வசதி மற்றும் மழைநீர் வடிகால் வசதிகள் செய்யப்பட்டுள்ளது எனவும், இதனை நகராட்சி பராமரிப்பிற்கு எடுத்துக் கொள்ளலாம் எனவும் பொறியாளர் அவர்களால் தெரிவித்துள்ளதின்படி மனைப்பிரிவு சாலைகள் ஒப்படைத்ததை ஏற்கலாம். பொது ஒதுக்கீடு இடத்திற்கான 10% தொகையினை நகர் ஊரமைப்பு துறைக்கு செலுத்தப்பட்டுள்ளது. சாலைகள் 19.04.2023ஆம் தேதிய தானபத்திரம் ஆவண எண்.1890–இன் மூலம் நகராட்சிக்கு தானம் செய்யப்பட்டுள்ளது. தெருவிளக்கு அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.1,65,000/–யும் மனுதாரர் நகராட்சிக்கு செலுத்த வேண்டும் என நகராட்சி பொறியாளர் அவர்கள் வழங்கிய குறிப்பின் அடிப்படையில், மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்குவதற்கு மனுதாரர் கீழ்க்கண்ட விவரப்படியான தொகைகளை நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டும்.

| வ. எண். | கட்டண விவரங்கள் | தொகை (ரூ.) |
|---|---|---|
| 1 | தெருவிளக்கு கட்டணம் | ரூ.1,65,000/– |
| 2 | மனைப்பிரிவு கட்டணம் (0.66ஏக்கர்) | ரூ. 20,000/– |
| 3 | அபிவிருத்திக் கட்டணம் | ரூ. 10,000/– |
| 4 | கூர்ந்தாய்வு கட்டணம் | ரூ. 1000/– |
| 5 | கட்டிட இடிபாடுகள் கட்டணம் (C&D Waste ) | ரூ. 2,000/– |
| 6 | அரசு வழிகாட்டி மதிப்பு கட்டணம் 3% | ரூ.5,23,200/– |
| 7 | மனைப்பிரிவு பராமரிப்பு கட்டணம் | ரூ.1,00,000/– |
| | **மொத்தம்** | **ரூ.8,21,200/–** |

அதன் அடிப்படையில், மனைப்பிரிவில் அமையும் சாலைகள் மற்றும் வடிகால்கள் நகராட்சிக்கு தானமாக ஒப்படைத்ததை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. சாலைகள் தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டதன் அடிப்படையில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், நாமக்கல் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.422/2023 நா.மா,நாள்.10.05.2023இல் மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கி மனைப்பிரிவு வரைப்படத்திற்கு ம.வ/ந.ஊ/(நா.மா) எண்.171/2023.(ம.வ/ந.ஊ.இ.எண்.61/2006–ஐ திருத்தியமைக்கப்பட்டது) என எண்ணிட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே, மனுதாரர் சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12843/2022/டிபி1, நாள்.20.10.2022–இன்படி, மனைப்பிரிவிற்கான சந்தை மதிப்பு கட்டணம் 3%, பராமரிப்பு கட்டண வைப்புத் தொகை மற்றும் மனைப்பிரிவு அனுமதிக் கட்டணத் தொகைகளை செலுத்திய பின்பு இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. தானபத்திரத்தின்படி சாலைகள் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதையும் மற்றும் பொது இட ஒதுக்கீடுக்கான 10% தொகையினை நகர் ஊரமைப்பு துறைக்கு செலுத்தியுள்ளதையும் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.
2. மனுதாரர் பராமரிப்பு வைப்புத் தொகை, சந்தை மதிப்பு கட்டணம் 3% மற்றும் மனைப்பிரிவு அனுமதிக் கட்டணத் தொகைகளையும் நகராட்சிக்கு செலுத்திய பின்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கலாம். **(ந.க.எண்.7585/2023/எப்1)**

**தீர்மானம் எண் : 713, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 2 :</u>**

நாமக்கல் நகராட்சிக்கு சொந்தமான ஜேடர்பாளையம் தலைமை நீரேற்று நிலையத்திற்குட்பட்ட, தும்மங்குறிச்சி உபநீருந்து நிலையத்தின் குடிநீர் சுத்திகரிப்பு பணிக்காக தேவைப்படும் Liquid Chlorine Gas Cylinders (900Kgs) 30 எண்ணிக்கை Gas Cylinders கொள்முதல் செய்வதற்கு மதிப்பீடு ரூ.11.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இப்பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மேற்கண்ட பணியினை இந்நகராட்சியின் குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்: 8348/2023/இ2)**

**தீர்மானம் எண் : 714, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 3 :</u>**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அரசு சேவைகள் மக்களுக்கு எளிதில் சென்றடையும் வகையில் அனைத்து பகுதியிலும் **மக்களுடன் முதல்வர்** சிறப்புத் திட்ட முகாம் நடத்த ஆறு இடங்களில் தேவையான வசதிகள் அமைக்கும் ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டிலான பணிக்கு 15.12.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

1. திரு.கே.ஜி.சீனிவாசன், வீசாணம், நாமக்கல் – மதிப்பீட்டைவிட 0.05% குறைவு
2. M/s. வர்ஷா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், நாமக்கல் – மதிப்பீட்டைவிட 0.12% அதிகம்

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>** :

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.05% குறைவாகவும் மற்ற ஒப்பந்தப்புள்ளியினைவிட குறைவாகவும் சமர்ப்பித்த திரு.கே.ஜி.சீனிவாசன், வீசாணம், நாமக்கல் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 7256/2023/இ3)**

**தீர்மானம் எண் : 715, அங்கீகரிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 4 :</u>**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட பெரியப்பட்டி கிராமம், சர்வே எண்.45/63, 46/3B1A6A,3B2–இல் உள்ள 0.651/2 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அனுமதி கோரி திரு.எம்.கந்தசாமி மற்றும் மூவர், பரமத்தி வேலூார், நாமக்கல் ஆகியோர் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களுக்கு நேரடியாக விண்ணப்பித்ததின் அடிப்படையில், நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களின் ந.க.எண். NKL/A2MBUIBD/16462/2023/TCP, நாள்.18.11.2023ஆம் தேதிய கடிதத்தில், மனைப்பிரிவின் வரைப்படத்திற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு சாலைகள் மற்றும் பொது உபயோக இடங்களை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டதை தொடர்ந்து இறுதி ஒப்புதல் வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மனைப்பிரிவிற்கான மூன்றாம் நபரின்(Third Party Inspection) தர ஆய்வு சான்றின் அடிப்படையிலும், மேற்படி இடத்தில் சாலை வசதி மற்றும் மழைநீர் வடிகால் வசதி, குடிநீர் பகிர்மான குழாய் வசதி, சோலார் விளக்குகள் வசதி செய்யப்பட்டுள்ளது எனவும் இதனை நகராட்சி பராமரிப்பிற்கு எடுத்துக் கொள்ளலாம் எனவும் நகராட்சி பொறியாளர் அவர்களால் தெரிவித்துள்ளதின்படி மனைப்பிரிவு சாலைகள் ஒப்படைத்ததை ஏற்கலாம். பொது ஒதுக்கீடு இடத்திற்கான 10% தொகையினை நகர் ஊரமைப்பு துறைக்கு செலுத்தப்பட்டுள்ளது. சாலைகள் .01.11.2023 ஆம் தேதிய தானபத்திரம் ஆவண எண்.5422–இன் மூலம் நகராட்சிக்கு தானம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்குவதற்கு மனுதாரர் கீழ்க்கண்ட விவரப்படியான தொகைகளை நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டும்.

| வ.எண். | கட்டண விவரங்கள் | தொகை (ரூ.) |
|---|---|---|
| 1 | மனைப்பிரிவு கட்டணம் (0.651/2) | ரூ. 20,000/– |
| 2 | அபிவிருத்திக் கட்டணம் | ரூ. 10,000/– |
| 3 | கூர்ந்தாய்வு கட்டணம் | ரூ. 1000/– |
| 4 | கட்டிட இடிபாடுகள் கட்டணம் (C&D Waste) | ரூ. 2,000/– |
| 5 | அரசு வழிகாட்டி மதிப்பு கட்டணம் 3% | ரூ.6,53,400/– |
| 6 | மனைப்பிரிவு பராமரிப்பு கட்டணம் | ரூ.1,00,000/– |
| | மொத்தம் | ரூ.7,86,400/– |

அதன் அடிப்படையில், மனைப்பிரிவில் அமையும் சாலைகள் மற்றும் வடிகால்கள் நகராட்சிக்கு தானமாக ஒப்படைத்ததை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. சாலைகள் தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டதன் அடிப்படையில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், நாமக்கல் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். NKL/A2MBUIBD/16462/2023/TCP, நாள்.18.11.2023–இல் மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கி மனைப்பிரிவு வரைபடத்திற்கு SWP/DTCP/NAMAKKAL/LAYOUT NO.364/2023 என எண்ணிட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே, மனுதாரர் சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12843/2022/டிபி1, நாள்.20.10.2022–இன்படி, மனைப்பிரிவிற்கான சந்தை மதிப்பு கட்டணம் 3%, பராமரிப்பு கட்டண வைப்புத் தொகை மற்றும் மனைப்பிரிவு அனுமதிக் கட்டணத் தொகைகளை செலுத்திய பின்பு இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. தானபத்திரத்தின்படி சாலைகள் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதையும் மற்றும் பொது இட ஒதுக்கீடுக்கான 10% தொகையினை நகர் ஊரமைப்பு துறைக்கு செலுத்தியுள்ளதையும் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.
2. மனுதாரர் பராமரிப்பு வைப்புத் தொகை, சந்தை மதிப்பு கட்டணம் 3% மற்றும் மனைப்பிரிவு அனுமதிக் கட்டணத் தொகைகளையும் நகராட்சிக்கு செலுத்திய பின்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கலாம். **(ந.க.எண்.7349/2023/எப்1)**

**தீர்மானம் எண் : 716, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5 :**

நகராட்சிக்கு சொந்தமான ஜேடர்பாளையம் புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டம் (Water Supply Improvement Scheme) குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் ரூ.256.41 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு முதற்கட்டமாக ஜேடர்பாளையம் நீரேற்று நிலையம், கபிலக்குறிச்சி சுத்திகரிப்பு நிலையம், தும்மங்குறிச்சி நீருந்து நிலையம் மற்றும் இந்நகரில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் வரை அமைக்கப்பட்டுள்ள அனைத்து கட்டமைப்பு மற்றும் நீருந்து குழாய்கள், மின் மோட்டார்கள் உட்பட அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு நாமக்கல் நகராட்சி வசம் தொடர் பயன்பாடு மற்றும் பராமரிப்பு பணிகள் 05.12.2023இல் ஒப்படைப்பு செய்துள்ளனர். மேற்கண்ட நீரேற்று நிலையம், சுத்திகரிப்பு நிலையம், நீருந்து நிலையம் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் மோட்டார்கள் இயக்கவும், திட்ட பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும், உடனடியாக இந்நகராட்சி மூலம் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு பணியாளர்கள் அமர்த்த வேண்டியுள்ளது.

இந்நகரில் ஏற்கனவே நீர் ஆதாரமான மோகனூர் நீரேற்று நிலையத்திலிருந்து இந்நகரின் குடிநீர் விநியோகம் வரை நிரந்தரப்பணியாளர்கள் இல்லாத காரணத்தால் வெளிக்கொணர் முகமை மூலமே பணி அமர்த்தப்பட்டு இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள், மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதே போல ஜேடர்பாளையம் திட்டத்திற்கும் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு பணியாளர்கள் அமர்த்த வேண்டியுள்ளது. எனவே நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரி வெளிக்கொணர் முகமை மூலம் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள், பணி அமர்த்தும் வரை (05.12.2023) வரை இயக்கம் மற்றும் பராமரிப்பு பணி பார்த்து வந்துள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினையே 29.02.2024 வரை அல்லது நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணியாளர் அமர்த்தும் வரை இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள கோரலாம், அதற்கு உண்டான செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்: 4936/2023/இ2)**

**தீர்மானம் எண் : 717, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6 :**

நாமக்கல் நகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கி வரும் ஈப்பு வாகனம் TN 88 D 8155 வாகனத்தில் பழுதுகள் ஏற்பட்டதால் பழுதுகளை உடனடியாக சரி செய்ய வேண்டியதின்அவசர அவசியம் கருதி, மேற்கண்ட ஈப்பு வாகன நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான Sri Lakshmi Auto Mobiles World, சேலம் என்ற நிறுவனத்தின் மூலமாக பழுது பார்ப்பு பணிகள் மேற்கொள்வதற்கு உத்தேச செலவினமாக ரூ.30000/ –ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்: 8049/2023/இ2)**

**தீர்மானம் எண் : 718, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7 :**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 11 செம்பாளிகரடு மெயின்ரோடு பகுதியில் உள்ள உப்புத்தண்ணீர் குழாய்கள் மற்றும் HDPE TANK பழுதடைந்துள்ளதால், அதனை சீரமைத்து மேலும் குடிநீர் குழாய்களை மாற்றி அமைக்க மதிப்பீடு ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.. இப்பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மேற்கண்ட பணியினை இந்நகராட்சியின் குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்: 8270/2023/இ2)**

**தீர்மானம் எண் : 719, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8 :**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட பெரியப்பட்டி கிராமம், சர்வே எண்.139/3A2A2–இல் உள்ள 0.48ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அனுமதி கோரி திருமதி.தனபாக்கியம், ஏ.எஸ்.பேட்டை மேல முதல் தெரு, நாமக்கல் என்பவர் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களுக்கு நேரடியாக விண்ணப்பித்ததின் அடிப்படையில், நகர் ஊரமைப்பு உதவி இயக்கு நர், நாமக்கல் அவர்களின் ந.க.எண். NKL/ DLV93E8Z/13133/2023/TCP, நாள்.20.10.2023ஆம் தேதிய கடிதத்தில், மனைப்பிரிவின் வரைபடத்திற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு சாலைகள் மற்றும் பொது உபயோக இடங்களை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டதை தொடர்ந்து இறுதி ஒப்புதல் வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மனைப்பிரிவிற்கான மூன்றாம் நபரின் (Third Party Inspection) தர ஆய்வு சான்றின் அடிப்படையிலும், மேற்படி இடத்தில் சாலை வசதி மற்றும் மழைநீர் வடிகால் வசதி, குடிநீர் பகிர்மான குழாய் உள்ளிட்ட வசதிகள் செய்யப்பட்டுள்ளது எனவும் இதனை நகராட்சி பராமரிப்பிற்கு எடுத்துக் கொள்ளலாம் எனவும் நகராட்சி பொறியாளர் அவர்களால் தெரிவித்துள்ளதின்படி மனைப்பிரிவு சாலைகள் ஒப்படைத்ததை ஏற்கலாம். பொது ஒதுக்கீடு இடத்திற்கான 10% தொகையினை நகர் ஊரமைப்பு துறைக்கு செலுத்தப்பட்டுள்ளது. சாலைகள் 26.09.2023ஆம் தேதிய தானபத்திரம் ஆவண எண்.4974–இன் மூலம் நகராட்சிக்கு தானம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்குவதற்கு மனுதாரர் கீழ்க்கண்ட விவரப்படியான தொகைகளை நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டும்.

| வ. எண். | கட்டண விவரங்கள் | தொகை (ரூ.) |
|---|---|---|
| 1 | தெருவிளக்கு கட்டணம் | ரூ.1,75,000/– |
| 2 | மனைப்பிரிவு கட்டணம் (0.48ஏக்கர்) | ரூ. 20,000/– |
| 2 | அபிவிருத்திக் கட்டணம் | ரூ. 10,000/– |
| 3 | கூர்ந்தாய்வு கட்டணம் | ரூ. 1000/– |
| 4 | கட்டிட இடிபாடுகள் கட்டணம் (C&D Waste) | ரூ. 2,000/– |
| 5 | அரசு வழிகாட்டி மதிப்பு கட்டணம் 3% | ரூ.5,22,720/– |
| 6 | மனைப்பிரிவு பராமரிப்பு கட்டணம் | ரூ.1,00,000/– |
| | **மொத்தம்** | **ரூ.8,30,720/–** |

அதன் அடிப்படையில், மனைப்பிரிவில் அமையும் சாலைகள் மற்றும் வடிகால்கள் நகராட்சிக்கு தானமாக ஒப்படைத்ததை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. சாலைகள் தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டதன் அடிப்படையில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், நாமக்கல் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். DLV93E8Z/13133/2023/TCP, நாள்.20.10.2023–இல் மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கி மனைப்பிரிவு வரைபடத்திற்கு SWP/DTCP/NAMAKKAL/LAYOUT NO.335/2023 என எண்ணிட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே, மனுதாரர் சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12843/2022/டிபி1, நாள்.20.10.2022–இன்படி, மனைப்பிரிவிற்கான சந்தை மதிப்பு கட்டணம் 3%, பராமரிப்பு கட்டண வைப்புத் தொகை மற்றும் மனைப்பிரிவு அனுமதிக் கட்டணத் தொகைகளை செலுத்திய பின்பு இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. தானபத்திரத்தின்படி சாலைகள் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதையும் மற்றும் பொது இட ஒதுக்கீடுக்கான 10% தொகையினை நகர் ஊரமைப்பு துறைக்கு செலுத்தியுள்ளதையும் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.

2. மனுதாரர் பராமரிப்பு வைப்புத் தொகை, சந்தை மதிப்பு கட்டணம் 3% மற்றும் மனைப்பிரிவு அனுமதிக் கட்டணத் தொகைகளையும் நகராட்சிக்கு செலுத்திய பின்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கலாம். **(ந.க.எண்.6792/2023/எப்1)**

**தீர்மானம் எண் : 720, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 9 :</u>**

நாமக்கல் நகராட்சிக்கு சொந்தமான ஜேடர்பாளையம் தலைமை நீரேற்று நிலையத்திற்குட்பட்ட, கபிலக்குறிச்சியில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் குடிநீர் சுத்திகரிப்பு பணிக்காக தேவைப்படும் Liquid Chlorine Gas Cylinders (900Kgs) 40 எண்ணிக்கை Gas Cylinders கொள்முதல் செய்வதற்கு மதிப்பீடு ரூ.15.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இப்பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மேற்கண்ட பணியினை இந்நகராட்சியின் குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்: 8347/2023/இ2)**

**தீர்மானம் எண் : 721, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 10 :</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 38 கொண்டிசெட்டிப்பட்டி ஏரி மழைக்காலங்களில் நிரம்பிவிடுவதால் ஏரியை ஒட்டியுள்ள நகராட்சி நடுநிலைப்பள்ளியிலுள்ள நான்கு வகுப்பறை கட்டிடத்தில் ஒரு அடிக்கு மேல் மழைநீர் தேங்கி வகுப்பறைகள் பயன்படுத்த இயலாத நிலை ஏற்படுகின்றது. மெலும் விளையாட்டு மைதானத்தில் மழைநீர் தேங்கி பயன்படுத்த இயலாத நிலை ஏற்படுகின்றது. எனவே, நான்கு வகுப்பறை கட்டிடத்தின் தரைதளத்தை உயர்த்தவும் மற்றும் விளையாட்டு மைதானத்தை உயர்த்தும் பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

<u>அலுவலகக்குறிப்பு</u> : - மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 8351/2023/இ3)**

**தீர்மானம் எண் : 722, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 11 :</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 8 கிருஷ்ணாபுரம் நகராட்சி தொடக்கப்பள்ளியில் உள்ள கட்டிடத்தின் மேற்கூரையில் Weathering coarse மற்றும் டைல்ஸ் அமைக்கவும், மழைக்காலங்களில் பள்ளி வளாகத்தில் மழைநீர் தேங்கா வண்ணம் கட்டிடத்தின் முன்புறத்தில் Paver Block அமைக்கவும் ஆய்வுக்கூடத்திற்கு Hand rail அமைக்கும் பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.6.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

<u>அலுவலகக்குறிப்பு</u> : - மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 8350/2023/இ3)**

**தீர்மானம் எண் : 723, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 12 :</u>**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3 சின்னமுதலைப்பட்டி வடக்கு காலனி பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் பராமரிப்பு பணி ரூ.11.00 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்னனுமதி பெறப்பட்டு, மேற்கண்ட பணிக்கு முதல் முறையாக 08.12.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. SS Infra, நாமக்கல் – மதிப்பீட்டிற்கு 0.11 சதவீதம் குறைவு
2. SS Construction, நாமக்கல் – மதிப்பீட்டிற்கு 0.15 சதவீதம் அதிகம்

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> : மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விடவும் மற்ற ஒப்பந்தப்புள்ளியினைவிடவும் குறைவாக சமர்ப்பித்த SS Infra, நாமக்கல் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். **(ந.க. எண். 7222/2023 /இ1)**

**தீர்மானம் எண் : 724, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 13 :**

நாமக்கல் நகராட்சி அலுவலகத்தில் வருவாய் பிரிவில் கேபின்கள் அமைத்தல், நகர்மன்ற தலைவர் அறையில் தடுப்புகள் அமைத்தல் மற்றும் அலுவலக கட்டிடத்தில் பராமரிப்பு பணி ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்னனுமதி பெறப்பட்டு, மேற்கண்ட பணிக்கு முதல் முறையாக 08.12.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. திரு.கே.ஜி. சீனிவாசன், நாமக்கல் – மதிப்பீட்டிற்கு 0.10 சதவீதம் குறைவு
2. Varsha Group of Construction, நாமக்கல் – மதிப்பீட்டிற்கு 0.12 சதவீதம் அதிகம்

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விடவும் மற்ற ஒப்பந்தப்புள்ளியினைவிடவும் குறைவாக சமர்ப்பித்த திரு.கே.ஜி. சீனிவாசன், நாமக்கல் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். **(ந.க. எண். 6904/2023 /இ1)**

**தீர்மானம் எண் : 725, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 14 :**

நகராட்சி அலுவலக கனிணி பிரிவில் பயன்படுத்தப்பட்டுவரும் 2மடிக்கனிணிகளை தற்போதைய பயன்பாட்டிற்கு ஏற்ப Software மாற்றி அமைக்கவும் மற்றும் சிறு பழுதுகள் மேற்கொள்ளுதல் பணியின் அவசரம் அத்தியாவசியம் கருதி விலைப்புள்ளி கோரபட்டதில் கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து 17.11.2023அன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

1. Haswiyhaa Innovations, Namakkal – 42,598/-
2. Power Park UPS, Salem – 43,660/-
3. SR Systems, Salem – 39,943/-

மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி சமர்ப்பித்த SR Systems, Salem நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :–**

1. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு குறைந்த விலைப்புள்ளி சமர்ப்பித்த SR Systems, Salem நிறுவனத்திற்கு அலுவலக பணியின் அவசரம் அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதியை பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 6904/2023/இ1)**

**தீர்மானம் எண் : 726, அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண். 15 :**

நாமக்கல் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை ஒப்பந்தமுறையில் தனியார் மூலமாக பராமரிக்கும் பணியை மேற்கொள்ள தலைமை பொறியாளர், நகராட்சி நிாவாக ஆணையரகம், சென்னைஅவர்களின் கடிதம் ந.களண். 23656/2013/டிஒ1, நாள்.27.09.2019 வாயிலாக அனுமதி பெறப்பட்டது. மேற்கண்ட பணிக்கு ஒளிவுமறைவுற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மாநிலஅளவில் தமிழ்ம ற்றும் ஆங்கில நாளிதழ்களில் விளம்பரம் செய்துமுதல் முறையாக 29.12.2017அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு தகுதி வாய்ந்த ஒப்பந்தாரர் Tamilnadu Water Supplys&Drainage System, Rasipuram, Namakkal நிறுவனத்தின் மூலமாக மூனறாண்டுகளாக பராமரிப்பு பணிகள் திருப்திகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போது ஆண்டு பராமரிப்புபணிகள் 14.11.2022 உடன் முடிவடைய உள்ளதாலும், அரசால் வெளிக்கொணர்வு முகமை மூலம் பாதாள சாக்கடை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தாரர்கள் அமர்த்த ஊதிய நிர்ணயம் மற்றும் அளவுகோல் நிர்ணயம் செய்யப்பட்டு வரும் நிலையிலும், ஒப்பந்த ஆவணங்கள் அடிப்படையில் மேற்கண்ட ஒப்பந்ததாரரர் Tamilnadu Water Supplys& Drainage System, Rasipuram, Namakkal நிறுவனத்தின் மூலமாகவே மேலும் 3 மாதகாலத்திற்கு (15.11.2022 முதல் 29.02.2024) அல்லது அரசால் வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்தாரர்கள் அமர்த்த ஊதிய நிர்ணயம் மற்றும் அளவுகோல் நிர்ணயம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் ஒப்பந்தாரர்கள் நியமிக்கும் காலம்வரை பாதாள சாக்கடை பராமரிப்பு பணிக்கான அனுமதியை நீட்டிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது .மேலும் ஒரு வருடகாலத்திற்கு

பாதாள சாக்கடை பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடு தொகையின் அடிப்படையில் ரூ,**11.60** இலட்சத்தில் **3** மாதகாலத்திற்கு மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மேற்கண்ட பணிக்களுக்கான ஒப்பந்த காலத்தைTamilnadu Water Supplys& Drainage System, Rasipuram, Namakka lநிறுவனத்திற்கு ஒரு வருட காலத்திற்கு **(15.11.2022** முதல் **29.02.2024)** அல்லது அரசால் வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்தாரர்கள் அமர்த்த ஊதியம் மற்றும் அளவுகோல் நிர்ணயம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் புதியதாக ஒப்பந்தம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் காலம்வரை நீட்டிக்கவும் மன்றஅனுமதிக்கலாம்.
2. பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணியின் அவரசம் அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதியை பெற்றுTamilnadu Water Supplys& Drainage System, Rasipuram, Namakkal நிறுவனத்திற்கு பணி உத்தரவு நீட்டிப்பு செய்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம். **(ந.க.எண்.7516/2023/இ1)**

**தீர்மானம் எண் : 727, அங்கீகரிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 16 :</u>**

நாமக்கல் நகராட்சிக்கு பொறியியல் பிரிவில் பாதாள சாக்கடை திட்டத்தில் தூர் வார பயன்படுத்தி இயங்கி வரும் DESILTING AUTO TN 28AM 9340 வாகனத்தின் தகுதி சான்றினை புதுப்பிக்க Oil Service,Wheel Allighment,Self Motor,Tingering &Welding Work, Painting Work பழுதுகள் ஏற்பட்டதால் பழுதுகளை உடனடியாக சரி செய்வதற்கு உத்தேச செலவினமாக ரூ.**1,50,000/–**ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மேற்கண்ட பணியினை இந்நகராட்சியின் குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசரம்அவசியம் கருதி, மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதியைப்பெற்று மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.6642/2023/இ2)**

**தீர்மானம் எண் : 728, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 17 :</u>**

இந்நகராட்சக்குட்பட்ட பாதாள சாக்கடை பராமரிப்பு பணியில் பயன்படுத்தப்பட்டு வரும் DESILTING AUTO TN 28AM 9340 வாகனத்தின் தகுதி சான்றினை புதுப்பிக்க Oil Service,Wheel Allighment,Self Motor,Tingering &Welding Work,Painting Work பழுதுகள் ஏற்பட்டதால் பழுதுகளை உடனடியாக சரி செய்ய ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பின்படி **01.11.2023** அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

1. TamilNadu Water supplys and drainage system, நாமக்கல் – மதிப்பீட்டைவிட **–0.20%** குறைவு
2. J.P Construction, நாமக்கல் – மதிப்பீட்டைவிட +**0.30%** அதிகம்

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>** :

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட **–0.20%** குறைவாகவும் மற்ற ஒப்பந்தப்புள்ளியினைவிட குறைவாகவும் சமர்ப்பித்த Tamil Nadu Water Supplys and Drainage System, நாமக்கல் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண்.6642/2023/இ2)**

**தீர்மானம் எண் : 729, அங்கீகரிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 18 :</u>**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.8 தும்மங்குறிச்சி மேற்கு வீதி, கிருஷ்ணாபுரம் நடுவீதி மற்றும் பெரியூர் பகுதியில் சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் பணி ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்னனுமதி பெறப்பட்டு, மேற்கண்ட பணிக்கு முதல் முறையாக 05.12.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. திரு.பி. மாணிக்கம், நாமக்கல் – மதிப்பீட்டிற்கு 0.15 சதவீதம் குறைவு
2. MPS Engineering Construction, நாமக்கல் – மதிப்பீட்டிற்கு 0.12 சதவீதம் அதிகம்

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> : மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விடவும் மற்ற ஒப்பந்தப்புள்ளியினைவிடவும் குறைவாக சமர்ப்பித்த திரு.பி. மாணிக்கம், நாமக்கல் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். **(ந.க. எண். 6596/2023 /இ1)**

**தீர்மானம் எண் : 730, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 19 :</u>**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.39 கொண்டிசெட்டிப்பட்டி கணபதி நகர் பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் பணி ரூ.9.60 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்னனுமதி பெறப்பட்டு, மேற்கண்ட பணிக்கு முதல் முறையாக 05.12.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. SS Construction, நாமக்கல் – மதிப்பீட்டிற்கு 0.10 சதவீதம் குறைவு
2. SS Infra, நாமக்கல் – மதிப்பீட்டிற்கு 0.30 சதவீதம் அதிகம்

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> : மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விடவும் மற்ற ஒப்பந்தப்புள்ளியினைவிடவும் குறைவாக சமர்ப்பித்த SS Construction, நாமக்கல் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். **(ந.க. எண். 6597/2023 /இ1)**

**தீர்மானம் எண் : 731, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 20 :</u>**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட பூங்கா சாலையில் அமைந்துள்ள கமலாலய குளத்தில் உள்ள கழிவுகளை அகற்றுதல் பணி ரூ.1.20 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண். 469, நாள்.30.06.2023 அனுமதி வழங்கப்பட்டு, மேற்கண்ட பணிக்கு முதல் முறையாக 21.07.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. SS Construction, நாமக்கல் – மதிப்பீட்டிற்கு 0.05 சதவீதம் குறைவு
2. SS Infra, நாமக்கல் – மதிப்பீட்டிற்கு 0.10 சதவீதம் அதிகம்

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> :

1. மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விடவும் மற்ற ஒப்பந்தப்புள்ளியினைவிடவும் குறைவாக சமர்ப்பித்த SS Construction, நாமக்கல் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. பணியின் அவசரம் அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதியைப்பெற்று குறைந்த ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்த SS Construction, நாமக்கல் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க. எண். 3927/2023 /இ1)**

**தீர்மானம் எண் : 732, அங்கீகரிக்கப்பட்டது.**

<u>**பொருள் எண். 21 :**</u>

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நகராட்சி பள்ளிகளில் **1** முதல் **5**ஆம் வகுப்பறை வரை பயிலும் மாணவர், மாணவிகளுக்கு காலை உணவு வழங்க சமையல் செய்யும் Common Kitchenக்கு ISO தரச்சான்று பெற்று வழங்க நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.**17404/2023**/எம்**1**, நாள்: **30.11.2023**ஆம் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதின்படி ISO தரச்சான்று பெறுவதற்கு கலந்தாலோசகர் (Consultancy) நியமித்து ஆய்வுகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.**75,000/–** ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி செலவினத்தை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 3571/2023/இ3)**

**தீர்மானம் எண் : 733, அனுமதிக்கப்பட்டது.**

**ஆணையாளர்,**
**நாமக்கல் நகராட்சி.**